# New Gen தமிழன்

இதழ் 7- ஜூலை 2013

**Published by Prime Point Foundation**




## கவர் ஸ்டோரி – அன்பை மறந்த தமிழ் சமூகம்

## இந்த இதழில்



| | |
|---|---|
| 2 | தலையங்கம் |
| 3 | கவர் ஸ்டோரி |
| 6 | பொது தேர்தலில் ஆன்லைன்’வாக்களிக்க |
| 9 | முதியவர்கள் |
| 10 | ஜார் சிட்டி |
| 11 | புத்தக விமர்சனம் – ஸ்நோமேன் |



இமெயிலில் தொடர்பு கொள்ள

newgenthamizhan@gmail.com

## தலையங்கம்

## இந்த ஒரு மாத காலத்திற்குள் பல குறிப்பிடத் தகுந்த நிகழ்வுகள்..

உத்தரகண்டின் வரலாறு காணாத பேரு வெள்ளம்..உயிர் சேதம்..உடைமை இழப்பு . இதில் நமது ராணுவம் கடுமையான சோதனைகளுக்கு இடையிலும் தங்களுடைய உயிரை பணயம் வைத்து மீட்பு பணிகளை சிறப்பாக மேற்கொண்டது மிகுந்த பாராட்டுதல்களுக்கு உரியது. நமது ராணுவத்தின் மீதான ம்,அதிப்பு பன்மடங்கு உயர்ந்திருப்பதுடன், ராணுவப் பணியின் மீதும் இளைஞர்களுக்கு மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

உணவு பாதுகாப்பு திட்டம்..அவசர சட்டத்தின் மூலமாக மத்திய காங்கிரஸ் அரசு இதை அமல் படுத்த நினைக்கிறது. திட்டம் கேட்பதற்கு நன்றாக இருந்தாலும், இத்தகைய மிகப் பெரிய திட்டத்தை செயல்படுத்துவதற்கான சரியான திட்டமிடல்களோ, அதற்கான யோசனைகளோ, கலந்தாலோசனைகளோ இல்லாமல் அவசர கோலத்தில் தேர்தலை மனதில் வைத்து செய்யப் படும் ஒரு திட்டமாகவே இருப்பதால் பல தளங்களிலும் இது குறித்த விமர்சனங்கள் எழுந்துள்ளன. இன்றும் பட்டினிச் சாவுகள் நடக்கும் இத் தேசத்தில் , 42 விழுக்காடு குழந்தைகள் சத்துக் குறைவால் அவதிப் படும் இத் தேசத்தில், ஏழைகள் அதிகம் உள்ள இத் தேசத்தில், மக்களுக்கான உணவு பாதுகாப்பு என்பது அத்தியாவசியம். அதனால்தான் சரியான திட்டமிடலோடு இத் திட்டத்தை செய்யவேண்டியது அவசியமாகிறது. ஆனால், திட்டத்தின் இப்போதைய நிலையை பார்த்தால், இது மேலும் பல லட்சம் கோடி ஊழலுக்குதான் வழி வகுக்கும் என்றே பல தரப்பிலும் கவலையை ஏற்படுத்தி இருக்கிறது.

> சாதிகள் மிக ஆழமாக வேரூன்றி அரக்கனைப் போல வளர்ந்து நிற்கிறது என்பதற்கு இச் சோக சம்பவமே உதாரணம்.

சில நாட்களுக்கு முன் உச்ச நீதிமன்றம் இனி குற்ற வழக்குகளில் சம்பந்தப்படும் , MP, M.L.A. -க்கள் தங்கள் பதவிகளை இழக்க வேண்டும் என்ற பரபரப்பு தீர்ப்பை வழங்கி ஒட்டு மொத்த இந்தியாவின் கவனத்தையும் கவர்ந்தது. அரசியலமைப்புச் சட்டத்தில், குற்ற வழக்கில் சம்பந்தப் பட்டிருக்கும் பதவியிலிருக்கும் MP, M.L.A.-க்களுக்கு பதவி பாதுகாப்பு வழங்கும் Section8 [4] குறித்து தான் இப்போது உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது. இதன் மீது விவாதங்களும், முறையீடுகளும் கண்டிப்பாக இருக்கும் என்றாலும் பல வருடங்களாக மக்களுக்கு இது குறித்து இருக்கும் கேள்விகளுக்கான விடையை நோக்கிய ஒரு ஜனநாயக பயணமாகவே இது இருக்கிறது.

தமிழகத்தில் நடந்த தருமபுரி இளைஞன் இளவரசன் மரணம், உச்ச பட்ச அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தியது. சாதிகள் மிக ஆழமாக வேரூன்றி அரக்கனைப் போல வளர்ந்து நிற்கிறது என்பதற்கு இச் சோக சம்பவமே உதாரணம். [இது குறித்த விரிவான பார்வை இந்த இதழில் தனிக் கட்டுரையாக வெளியாகி உள்ளது.]

**பானு கோம்ஸ்**

# கவர் ஸ்டோரி
# அன்பை மறந்த தமிழ் சமூகம்

**தர்மபுரி ....**

தேசிய அளவில் பேசப் பட்டு , இப்போது மேலை நாடுகளின் கவனத்தையும் ஈர்த்திருக்கும் ஊர். பேசப் படுவதும், கவனத்தை ஈர்ப்பதும் நல்லது கெட்டது என்ற இரு நிலைகளிலும் நடக்கும். தர்மபுரி பெற்ற கவனம் தமிழகத்தினரை தலை குனிய வைப்பதாக இருக்கிறது.

18 வயது நிறையாத தலித் இளைஞன், அவனை விட இரு வயது மூத்த வன்னிய பெண் இவர்களுக்கிடையேயான காதல், ஒரு கட்டத்தில் பெற்றோர் சம்மதம் இன்றி திருமணத்தில் முடிகிறது. இது வரையிலான சம்பவங்கள் காதல் திருமணங்கள் பண்ணிய, நடந்த பல குடும்பங்களிலும், ஊர்களிலும் நடந்தவை..இனியும் நடக்க இருப்பவை.

இதன் பிறகு நடந்தவைதான் ,ஒட்டு மொத்த தமிழகத்தையும், தன்னை தானே திரும்பிப் பார்த்து அவர்தம் வாழ்க்கை முறை, சமூக அமைப்புகள் போன்றவற்றை ஆழ்ந்து நோக்கி சரி செய்ய வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு உள்ளாக்கி இருக்கிறது.

காதல் இங்கு சுலபமாக ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை. பல சிரமங்கள், வேதனைகள், இழப்புகளுக்கிடையிலேயே பல காதல்கள் திருமணங்களில் முடிகின்றன. ஆனால், பெரும்பாலான காதல்கள், சாதி, மதம், அவற்றால் கட்டமைக்கப் பட்டிருக்கிற நமது சமூகம் இவற்றிற்காக காவு கொடுக்கப் படுகின்றன என்பது தான் நிஜம்.
இளவரன்-திவ்யா காதல் திருமணம் பெரும் சாதிக் கலவரத்தை உருவாக்கி ,சட்டம் ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தியதோடல்லாமல்,



அரசு, நீதிமன்றம், சட்டம் என்று பலர் இப் பிரச்சினையை தீர்க்கப் பாடு பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இளவரசனின் மரணத்தில் முடிந்திருக்கிறது. குடும்பம் ஏற்றுக் கொள்ளாத காதல் திருமணத்தை வாழ்வதே நம் சமூகத்தில் பெரிய வேதனையான விஷயம். இதில், இரு சாதிப் பிரிவினர் இரு பெரும் பிரிவாக பிரிந்து நின்று , வெறி பிடித்து அடித்துக் கொண்டதிலும், அது ஒரு கட்டத்தில் தன்மானப் பிரச்சினையாக மாறிப் போனதன் விளைவு இளவரசன் -திவ்யா பிரிவு. மிகக் கடுமையான அழுத்தத்திற்கு ஆளாகும் எப்பேர்பட்ட தெய்வீகக் காதலும் பிரிவில் தான் முடியும்.

இக் காதலில் முதிர்ச்சி இல்லை. சமூகத்தில் தன் நிலையை உறுதிப் படுத்திக் கொண்டு பின்னர் காதலில் இறங்கலாம் என்றெல்லாம் பேசுபவர்கள் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும்.

காதல் இரு தனி மனிதர்களுக்கிடையிலான தனிப் பட்ட விஷயம். நம் சமூகம் குடும்பம் சார்ந்தது என்பதால் , அவர்களின் பெற்றோருக்கு மட்டுமே இதில் மாற்றுக் கருத்துக்கள் இருப்பின் சொல்லும் உரிமை இருக்கிறது. பெற்றோர் கூட தடுக்க முடியாது என்பது தான் உண்மை. முதிர்ச்சி இல்லாத காதலாக இருப்பின் தானாகவே முடிந்து விடும். இல்லையெனில் திடப் படும். எப்படி இருப்பினும் அது அவர்களின் தனிப் பட்ட விஷயம்.

இதில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது..இளவரசன் மரணத்திற்கு நம் தமிழ் சமூகம் பெரிய அளவில் ரியாக்ட் செய்யவில்லை என்பதுதான். இதற்கான காரணத்தை ஆழ்ந்து பார்த்தோமானால் ஒட்டு மொத்த சமூகமும் எவ்வாறு சாதியின் பிடியில் சிக்கிக் கொண்டுள்ளது என்பது விளங்கும்.

ஏற்பாட்டுத் திருமணங்கள் நம்முடையை கலாசார அடையாளங்களாகவே ஆகி விட்டன. நீடித்த, நிலைத்த திருமணங்களுக்கும், உடையாத உறுதியான குடும்ப அமைப்புகளுக்கும் இத்தகைய ஏற்பாட்டுத் திருமணங்கள் தான் காரணம் என்று போற்றப் படுகிறது.

காதல் எல்லோருக்கும் ஏற்பட்டுவிடாது. வந்து விடாது..சரி. அத்தகைய நேரத்தில் இவ்வகை ஏற்பாட்டுத் திருமணங்கள் உதவுகின்றன.



ஆனால், அவை ஏன் சாதி விட்டு சாதி செய்யப் படுவதில்லை? ஏற்பாட்டுத் திருமணங்களின் அடிப்படை என்ன ? சாதி. சாதி மட்டுமே..

இன்றைக்கும் தமிழகத்தில், 95 சதவிகித திருமணங்கள் ஏற்பாட்டுத் திருமணங்கள் தான். இவை அனைத்தும், சாதி மாறி விடாமல், ஒரே சாதிக்குள் நடக்கும் ஏற்பாட்டுத் திருமணங்கள். சாதி மட்டுமே. இதை சிதறிவிடாமல் உறுதிப் படுத்துவதற்கு வரதட்சிணை என்ற பெயரில் பணமும், கௌரவம் , கலாசாரம் என்ற பெயரில் சமூக ஆதரவும் அளிக்கப் படுகிறது.

வரதட்சிணை என்ற பெயரில் எளிதில் கிடைக்கும் பணமும், பெற்றோர் மற்றும் சமூக ஆதரவு மற்றும் அந்தஸ்தும் இம்மாதிரியான சாதி அடிப்படையிலான ஏற்பாட்டுத் திருமணங்களை எவ்வித இடையூறும் இல்லாமல் காலம் காலமாக வெற்றிகரமாக தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. மொத்தத்தில்..

பகுத்தறிவு பேசிய நம் தமிழ் சமூகம் சாதிகளுக்குள் மூழ்கிக் கிடக்கிறது. அதை வாழ்வாக அனுதினமும், ஒவ்வொரு நொடியிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதனால் தான், இளவரசனின் மரணம் மிகப் பெரிய போராட்டங்களையோ அல்லது அதிர்ச்சியையோ மக்களிடையே ஏற்படுத்தவில்லை.

சாதி என்றவுடன் அது ஏதோ இந்துக்களுக்கு மட்டுமே உரியது என்று எண்ண வேண்டியதில்லை. சாதி என்பது கிறித்துவ, இஸ்லாமிய மற்றும் பிற மதங்களிலும் பலமாக வேரூன்றி இருக்கும் ஒன்று.

ஏற்பாட்டுத் திருமணங்கள் எந்த சாதிப் பிரச்சினையும் ஏற்படுத்துவதில்லை ..ஊர்கள் பற்றி எரிவதில்லை என்பதனாலேயே இதன் மீதான கவனம் குறைவாக இருக்கிறது. ஆனால், மனிதர்களை பிரிக்கும் தியின் ஊற்றுக் கண் இங்கு தான் இருக்கிறது.

சாதியை வாழ்வியலாக கொண்டிருக்கும் நம் தமிழ் சமூகம் அதிலிருந்து மீண்டு வரவேண்டுமானால், ஏற்பாட்டுத் திருமணங்கள் இரு வேறு சாதிகளுக்கிடையில் நடைபெறுபவையாக மாற வேண்டும். பெண்ணடிமைத் தனத்திலிருந்து பெண்கள் வெளியில் வரும்போது , தானாகவே சாதி ஒழிப்பும் எளிதாகவே நடந்துவிடும் !

பெண்ணடிமைத் தனம் எப்போது ஒழியும்? அதற்கு போக வேண்டிய தூரம் அதிகம் என்றாலும் பயணம் ஆரம்பித்து விட்டது !

Banu Gomes

---


PRESENSE

எமது ஜூன் 2013 மாத ஆங்கில மின் இதழ் (75வது இதழ்) ***PreSense***ஐ பதிவிறக்கம் செய்து படிக்க

[www.prpoint.com/ezine/presense0613.pdf](www.prpoint.com/ezine/presense0613.pdf)

# இந்தியாவில் பொது தேர்தலில் "ஆன்-லைன்" வாக்களிப்பு சாத்தியமா?

இந்தியா ஒரு வளரும் நாடு. நடுத்தர வர்கத்தினர் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றனர். அவர்களுடன் அதிகரித்துக் கொண்டே இருப்பது பல கனவுகளும் எதிர்பார்ப்புகளும். வாழ்க்கை தரம் உயர உயர கனவுகளும் எதிர்பார்ப்புகளும் மேலும் அதிகரிப்பது இயல்பு. இந்த வட்டத்தில் Comforts எனப்படும் "வசதிகளும்" அடங்கும். கை விசிறி வைத்திருப்பவர் மின்னணு காத்தாடிக்கு மாறுவார். பிறகு சற்று வசதி பெருகும் போது குளிர்சாதன இயந்திரத்திற்கு ஆசை படுவார். இதே போல் விஞ்ஞானம் நாளுக்கு நாள் வளர மக்கள் சொகுசு வாழ்க்கையை நோக்குகின்றனர். இதில் தவறாக எதுவும் சொல்லுவதற்கு இல்லை. ஏனெனில் உலகம் அந்த வேகத்தில் போகிறது.

**தேர்தலும் ஜனநாயகமும்:**

ஜனநாயகத்தின் அழகே மக்களே தங்களுக்கு பிடித்தவரை பதவியில் அமர வைப்பது தான். ஆனால் துரதிஷ்டவசமாக நம் நாட்டில் வாக்களிப்பு சதவீதம் மிகவும் மோசமாகவே இருக்கின்றது. கடந்த 2009ம் ஆண்டு நடந்த பொது தேர்தலில் மொத்த வாக்கு சதவீகிதம் 60 தான். என்ன தான் மக்களை குறை கூறினாலும் சிலரிடம் வாக்களிக்க முடியாமல் போனதற்கு நியாயமான காரணங்களும் இருக்க தான் செய்கின்றது. அதிலும் இப்போது குறிப்பிட்ட சதவீத இளைஞர்கள் சுத்தமாகவே வாக்களிக்க முடியாத நிலைக்கு தள்ள பட்டுள்ளனர். காரணம் இந்தியா முழுவதிலும் இளைஞர்கள் தங்கள் படிப்புக்காகவும், வேலைக்காகவும் தங்கள் வீட்டை விட்டு வேறு இடத்துக்கு செல்ல வேண்டிய நிலைமை உள்ளது. இது பெரும்பாலாக இளைஞர்களாக இருப்பினும் அனைத்து வர்கத்தினரும் இதில் அடங்குவர்.

தேர்தல் தினம் பொது விடுமுறையாக இல்லாத காரணத்தினால் வேலையில் இருக்கும் பலரால் வாக்களிக்க முடியாத நிலைமையே இருக்கின்றது. அப்படியே விடுமுறை தினமாக இருப்பினும் தொலைவில் இருப்பவர்கள் வாக்களிப்பதற்காக வந்து செல்வது நடைமுறையில் மிகவும் சிரமம்.

இதனால் பல ஆயிர கணக்கான மக்கள் வாக்களிக்க முடியாத சூழ்நிலை உள்ளது. இவர்களுக்கு வாக்களிக்க வழிவகை செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகிறது.

**ஆன்-லைன் வாக்களிப்பு:**

மாற்று வழி என்ன என்று பார்க்கும் போது "ஆன்-லைன் வாக்களிப்பு" ஒரு சாத்தியமாக தென்படுகிறது. ஆனால் அது சாத்தியமா? நடை முறையில் ஒத்து வருமா? முறைகேடுகளுக்கு வழி இருக்கின்றதா? என்ற பல நியாமான கேள்விகள் நமக்கு வருவது இயல்பு.




இந்த நேரத்தில் இந்தியாவில் முதன் முதலாக "ஆன்-லைன்" வாக்குபதிவை வெற்றிகரமாக உள்ளாட்சி தேர்தலில் பயன் படுத்திய குஜராத் தேர்தல் ஆணையத்தை நாம் பாராட்டி ஆக வேண்டும். நாடு முழுவதும் இது சாத்தியமா என்ற விவாதம் இருக்கும் போதிலும் இதை ஒரு மாநிலத்தில் செயல் படுத்தியது பெரிய விஷயம் தான். அதன் செயல்முறையை சற்று விரிவாக பார்ப்போம்.

**“ஆன்-லைன் வாக்களிப்பு” செயல்முறை:**

1) ஆன்-லைனில் வாக்களிக்க விரும்பும் மக்கள் முதலில் தம்மை இணைய வாக்காளராக பதிவு செய்துக் கொள்ள வேண்டும். இதற்கு www.onlinevotinggujarat.gov.in என்ற இணையதளத்திற்கு சென்று தம்முடைய பெயர், விலாசம், வயது, கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி போன்ற விவரங்களை பதிவு செய்ய வேண்டும்.

2) இதை பதிவு செய்தவுடன் மாநில தேர்தல் ஆணைய அதிகாரிகள் தகவல்கள் சரியா என்று சோதிக்க வீட்டிற்கு வருவர்.

3) பிறகு மின்னஞ்சல் மூலமாக பயனர்பெயர் (username) மற்றும் கடவுச்சொல் () அனுப்பப்படும். இதை வைத்து மக்கள் தங்கள் அக்கவுண்டை ஆக்டிவேட் செய்து கொள்ள வேண்டும்.

**ஆன்-லைன் வாக்குபதிவு இணையதளம்**




4) முதல் முறை பயன் படுத்தும் போது தங்களுடைய பயனர்பெயர் மற்றும் கடவுச்சொல் இரண்டையும் மாற்றிக் கொள்ள வேண்டும். அதை எதிர்கால பயனுக்காக குறித்தும் வைத்துக் கொள்வது நல்லது.

5) பிறகு தேர்தல் தினத்தன்று www.onlinevotinggujarat.gov.in என்ற இணைய தளத்திற்கு சென்று தம்முடைய பயனர்பெயர் மற்றும் கடவுச்சொல் இரண்டையும் கொடுத்து தம் அக்கவுண்ட்டுக்குள் செல்ல வேண்டும்.

6) தற்போது வாக்கு காகிதம் தென்படும். அதில் நாம் வாக்களிக்க விரும்பும் வேட்பாளரை தேர்வு செய்ய வேண்டும்.

7) தற்போது வாக்களர் தேர்தல் ஆணையத்திடம் பதிவு செய்த கைபேசி எண்ணுக்கு ஒரு குறுஞ்செய்தி குறியீடு அனுப்பப் படும். அதை கணினியில் பதிவு செய்ய வேண்டும்.

**குறுஞ்செய்தி குறியீட்டை பதிவு செய்ய சொல்கிறது**




8) நம்முடைய வாக்கு பதிவாகி விட்டது என்ற செய்தி தென் படும். நம் வாக்கு பதிவாகி விட்டது என்று அர்த்தம்.

<u>வாக்குபதிவு ரசீது</u>




இந்த திட்டம் மத்திய அரசிடம் இருந்து சிறந்த மின்னணு ஆளுகை திறனுக்காக சிறந்த திட்டம் என்ற விருதை பெற்றது குறிப்பிடதக்கது. இந்த திட்டத்தை இந்தியா முழுவதும் செயல் படுத்தும் போது வாக்கு சதவீதம் அதிகரிப்பது மட்டும் இன்றி, மக்கள் வீட்டில் இருந்த தங்கள் ஜனநாயக கடமையை செயல் படுத்த வழிவகை செய்யும் என்று சொன்னால் அது மிகையாகாது.

**Surya S.G.**

---




**Watch the video presentation on the 'Milestones in the journey of the ezine'**

**http://youtu.be/w4xnOzdQ71Y**

**Also watch the story of cartoon character PRince published in the ezine PreSense**

**http://youtu.be/vLXWCihUqT0**

# முதியவர்கள்

என் நண்பனின் செல்பேசியை பழுது பார்க்க அதற்கான சேவை நிலையத்திற்கு சென்றபோது, அந்த நிலையத்தின் காவலுக்கு ஒரு எழுபத்தைந்து வயதைத் தாண்டிய பெரியவர் நின்றிருந்தார். புருவம், கண்மயிர் என மொத்தமும் நரைத்த சோர்ந்துபோன முகம், பெரிய கண்ணாடிக்குள் புதைந்த சிறிய கண்கள், உதறலெடுத்து ஆடிக்கொண்டிருந்த மெலிந்த கைகள், சற்றும் பொருத்தமில்லாத உடைக்குள் அடைக்கப்பட்ட மிகவும் ஒல்லியான தேகம். நான் பார்க்கும் பெரும்பாலான தனியார் நிறுவனங்களில், காவலுக்கு நிற்பவர்களின் பொதுவான வர்ணனை இது தான். அங்கு வந்து போகும், அவரின் வயதில் கால்வாசிகூட முடித்திராத இளசுகளுக்கு கதவைத் திறந்துவிடுவதும், தலைக்கு மேல்கைவைத்து வணக்கம் வைப்பதும் அவர் வேலை. இதை நாகரீகம் என்று யார் சொல்லிக் கொடுத்தது? எதோ ஒரு அரைகுறை நாகரீகத்தை, அரைகுறையாக புரிந்து கொண்ட அரைகுடங்களின் தளும்பல் போலிருக்கிறது, நமது இந்த எதிர்பார்ப்புகள்.

இழிவான வேலையா?

இல்லவே இல்லை. பிறர்க்கு தீங்கு விளைக்காத எந்தத் தொழிலும் இழிவில்லை எனும் ஒரு கருத்து உண்டு. ஆனால், மற்றவருக்கு வெறும் ஈகோ பூஸ்ட் ஆக மாத்திரம் செயல்படும் இந்த தூக்கு தூக்கும் வேலைகளை, நமது முந்தைய தலைமுறையோடு நமக்கு இருக்கும் ஒரே அடையாளமான 'பெரியவர்'களிடம் விட்டு விட்டால், இத்தனை நாளும் நம் கலாசாரம், நம் பெரியவர்கள் என உச்சிமுகர்ந்ததெல்லாம் போகாத ஊருக்கு வழி சொன்ன கதையா? பிறர் நமை கவனிக்கும்போது நாம் நடந்து கொள்வது நம் நடத்தையென்றும், யாருமே நமை கவனிக்காதபோது நாம் நடந்து கொள்வதுதான் நம் குணம் என்றும் ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு. இன்று இந்த மொத்த தேசத்தையும் சாட்சியாய் வைத்துக்கொண்டு, அவர்களின் கண்முன்னே, இந்த நாட்டின் கலாச்சாரத்தை முழுவதுமாய் அழிக்கும் நம் நடத்தையை என்னவென்று சொல்வது.

தேவையிருப்பதால் தான் வேலைக்கு வருகிறார்கள்:

புரிகிறது. எல்லோருமே ஏழையென்றால் வேலை கொடுப்பதற்கு ஆளிருக்கமாட்டாது. அதேபோல் எல்லோருமே பணம் படைத்தவரென்றால் வேலை செய்வதற்கு ஆளிருக்கமாட்டாது. அளவான ஏற்றத்தாழ்வுகள்தான் சமூக, பொருளாதார சக்கரங்களுக்கு உந்துசக்தி. ஆனால், இப்போது காணப்படும் அளவுதாண்டிய ஏற்றதாழ்வுகளாலும் அதன் மறைமுக விளைவுகளாலும், நம் சமூகக் கடமைகளிலிருந்து வழுவி, ஏதோ ஒரு கிளையை பிடித்துத் தொங்கும் குரங்கைப் போல, நமக்கு சரிப்பட்டு வராத நாகரீகங்களை பற்றித் தொங்கி வருகின்றோம்.

தேவையிருப்பவர்களை இலக்காக்கும் சுயநலவாதிகள்:

இன்றைய தேதியில், அரசுகள் கவனிக்காமல்விட்ட எல்லா வளங்களையும் போல, முதியோர்களையும் கார்ப்பரேட் அட்டைப் பூச்சிகள் தங்கள் சுயலாபத்திற்காக முழுமையாக பயன்படுத்திகொள்கின்றன. இது போதாக் குறைக்கு, பெயரளவிலான செக்யூரிட்டி ஏஜென்சிகள், ஏழை முதியோர்களையும், கைவிடப்பட்டவர்களையும், அவர்கள் வேலைத்திறன், வயது முதலிய எந்த காரணிகளையும் பொருட்படுத்தாது உபயோகித்து கொள்கின்றன. இல்லாதவர் இலக்காகின்றனர்.

பதிலென்ன?

மகளிர் சுய உதவிக் குழுக்கள் எவ்வாறு தமிழக மகளிர்க்கு புத்துயிர் ஊட்டியதோ,

அதே வகையில் முதியோர் சுய உதவி குழுக்கள், நலிந்து வரும் இந்தக் கூட்டதிற்கும் உயிரளிக்கலாம். குறைந்த பட்சம் அரசின் காய்கறி அங்காடிகள் உள்ளிட்ட சிறப்புத் திட்டங்களில் அவர்களுக்கு பங்களிக்கலாம். இத்தனை ஆண்டு வாழ்ந்து மட்டுமே பெறக்கூடிய அனுபவச் செல்வம் பெற்ற அவர்களை இன்னமும் பொறுப்போடும், நல்ல முறையிலும் பயன்படுதிக்கொள்ள நமக்கு ஆயிரம் வழிகளுண்டு. வாழ்க்கை முழுதும், கொஞ்ச கொஞ்சமாய் சேர்த்த அவர்களின் சுய மரியாதையையும் உண்டியல்க்காசாய் உடைத்தெறியாமல் இருக்கும் கடமையும் நமக்குண்டு.

அந்த நாள் வரையில்...

ஒருமுறை ஒரு ஜெர்மானிய ஆசிரியரிடம் நான் பேசிக்கொண்டிருக்கும் போது, அவர் சொன்னார், "வாழ்க்கையின் முதல் இருபது வருடங்கள் எந்த கலாசாரத்தின் மீதும் நாங்கள் பெரிதாய் நாட்டம் கொள்வதில்லை, அடுத்த முப்பது வருடங்கள் அவரவர் கலாசரச் சுமையை பற்றித் தொங்குகிறோம், அதற்குப் பின், உன்னதமான அன்பின் கலாசாரத்தை தேடும்போது, எங்களுக்கு இந்தியர்கள் தான் நினைவுக்கு வருகிறார்கள். குறிப்பாக, பெற்றவர்களையும், முதியவர்களையும் இந்தியர்கள் அரவணைப்பது, நாங்கள் எல்லோரும் அவர்களை அண்ணார்ந்து பார்க்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது" என்றார். மேற்சொன்ன அந்த நாள் வரையில்...எந்த ஜெர்மானியர் அண்ணார்ந்து பார்த்தாலும், இந்தியர்கள் யாரும் தெரியப் போவதில்லை.



அடையாளப் புகைப்படம் - சாட்சியல்ல. (Representative Image only. Theme of the article does not indicate the person above.) I think blurring is a way of saying that we close our eyes at things we should question and so.

By Elangovan S

## ஜார் சிட்டி

சமீப காலமாக ஸ்கேண்டிநேவியன் படங்கள் மற்றும் நாவல்கள் மேல் ஒரு பிரியம். அதிலும் குற்றப் புனைவுகள் மிகவும் அருமையாக படமாக்கப்பட்டிருப்பதால் மேலும் ஆவல் அதிகமாகியது. ஐஸ்லாந்து நாட்டின் படமான ஜார் சிட்டி அது போல ஒரு படமே.




ஸ்கேண்டிநேவியன் போலீஸ் அதிகாரிகளுக்கு பிரச்சினைகளுக்கு மட்டும் பஞ்சமே இருப்பதில்லை போலும். இங்குள்ள வால்டர் வெற்றிவேல் போலல்லாமல் நிலைமைக்கேற்ப அவர்கள் தங்களை மாற்றிக் கொள்வதும் தவறான முடிவெடுத்த சமயத்தில் அழுவதும் மிக சாதாரணமாகவும் அழகாகவும் இருக்கிறது. ஐஸ்லாந்து போலீஸ் அதிகாரி எர்லாந்தர் சிறு வயதில் அண்ணனைத் தொலைத்தவர். இது அவர் வாழ்நாள் முழுவதும் அவரைத் துரத்துகிறது. சிறு சிறு விஷயங்களை கவனைத்திருந்தால் அண்ணனைக் காப்பாற்றியிருக்கலாமோ என்ற ஏக்கமே

அவரை போலீஸ் வேலைக்குத் தள்ளுகிறது. குடும்பத்தை கவனிக்காததால் அவரது மகள் தவறான பாதைக்கு செல்கிறாா். இவ்வாறிருக்க ஒரு 60 வயது மதிக்கத்தக்க ஒரு மனிதன் ஆஷ்டிரேயால் அடித்து கொலை செய்யப்பட்ட ஒரு வழக்கை ஆராய வேண்டி வருகிறது.

கொலை செய்யப்பட்டவா் ஒரு காமுகன் என்றும் பல வருடங்களுக்கு முன் அவா் தனது இரு நண்பா்களுடன் சோ்ந்து பல பெண்களைக் கற்பழித்ததும் தெரிய வருகிறது. அதே நேரத்தில் ஒரு வினோதமான நோயால் ஒரு 5 வயது குழந்தை இறக்கிறது.இதனால் மிகவும் உடைந்து போன தந்தை அதன் காரணத்தை ஆராய்கிறாா்.



இறந்து போன குழந்தைக்கும், கொலை செய்யப்பட்டவனுக்கும் என்ன தொடா்பு? எவ்வாறு எா்லாந்தா் இந்த முடிச்சை அவிழ்க்கிறாா்? வழக்கு முடிந்த பின்னும் சம்பந்தப்பட்டவா்களில் ஒருவராவது நிம்மதி அடைந்தாா்களா என்பதே மீதிப் படம். ஐஸ்லாந்தியப் பெயா்கள் மிகவும் கடினமாக இருப்பதால் நடிகா்களைக் குறிப்பிட முடியவில்லை. இருந்தாலும் அனைவரும் மிகவும் சிறப்பாக பங்களித்திருந்தனா். குறிப்பாக கொலை செய்யப்பட்டவரின் நண்பராக சிறையில் இருக்கும் ஒருவா் மிகவும் அநாயசமாக நடித்திருந்தாா்.

மிகவும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியது பின்னணி இசை. சரியான நேரத்தில், சரியான கருவிகளால் இசைத்திருந்ததால் படத்துடன் மிகவும் ஒன்றி படம் பாா்க்கும் அனுபவத்தை அலாதியாக்குகிறது.

நோ்த்தியான திரைக்கதை, அனுபவமிக்க நடிகா்கள், மனதைப் புரட்டிப் போடும் கதை என அனைத்தும் இணைந்து ஜாா் சிட்டியை ஒரு அருமையான படமாக்குகிறது.

பிரகதீஷ் பிரசன்னா

---

## புத்தக விமா்சனம் – ஸ்நோமேன்

குற்றப்புனைவுகளில் ஸ்கேண்டிநேவியன் நாவல்களை அடிக்க ஆள் இல்லை என்று பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது நிரூபணமாவது உண்டு. வாலாண்டா் தொடா்கள், அதற்கு முன் மாா்ட்டின் பெக் என அவா்கள் படைத்த பாத்திரங்கள் ஏராளம். சமீபத்தில் அங்கு பிரபலமாக பேசப்பட்டுக் கொண்டிருப்பவா் யூ நெஸ்போ (Jo Nesbo). அவரது ஹாாி ஹோலே கதாபாத்திரம் மிகவும் பிரபலம். குடிப்பிரச்சினை உள்ள ஒரு போலீஸ் அதிகாாி. பல இடங்களில் டா்டி ஹாாியை நினைவுபடுத்தும் ஒரு பாத்திரம். யாருக்கும் அடங்காத, தன் உள்ளுணா்வை மட்டுமே முழுவதுமாக நம்பும் ஒரு அதிகாாி.

ஸ்நோமேன் – ஹாாி ஹோலே தொடாில் மிகவும் பிரபலமான ஒரு நாவல். தொடாில் 7வதாக வந்த இந்த நாவலே உலக அளவில் மிகவும் பெரிய பெயரைப் பெற்றுத் தந்தது. முதலில் இருந்து

படித்தால் ஹாரி ஹோலே பற்றி முழுமையான ஒரு பிம்பம் உருவாகும் இருந்தாலும் இந்த நாவலைத் தனியே படித்தாலும் முன் நடந்த பல விஷயங்களை நாம் தெரிந்து கொள்ளலாம்.

நார்வேயின் ஓஸ்லோ நகரில் நடக்கும் தொடர் கொலைகளை ஆராய ஹாரி ஹோலே பணிக்கப்படுகிறார். ஒவ்வொரு முதல் பனி நாளிலும் ஒரு இளம் தாய் காணாமல் போகிறார். அவர் வீட்டு முன் அல்லது அருகில் ஒரு பனி மனிதன் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. பல நாட்கள் இந்த வழக்குகள் காணாமல் போனவர்கள் பர்ரியலில் இருப்பதால் அவர்கள் இறந்திருக்கலாமோ என்கிற சந்தேகத்தில் ஹாரி ஹோலே விடம் இந்த விஷயம் வருகிறது. நார்வேயின் இன்னொரு பகுதியான பெர்கென் நகரிலிருந்து ஒரு பெண் அதிகாரி ஹாரிக்கு துணையாக செயல் படுகிறார். இதை எல்லாம் தவிர ஹாரிக்கு முதல் பனி நாளில் ஒரு கொலை விழும் என்கிற மொட்டைக் கடிதமும் வருகிறது.

அது மட்டுமல்லாமம் ஹாரியின் சொந்த வாழ்க்கை ஆகக் கொடுமையாக இருக்கிறது. அவரது காதலி ரேக்கல் இன்னொருவரோடு வாழ்கிறார். ரேக்கலின் பையன் ஒலெக் ஹாரியை மட்டுமே தந்தையாகப் பார்க்கிறான். இருந்தும் ஹாரியின் வேலையும் அதைச் சார்ந்த ஆபத்துகளும் அவர்கள் சேர விடாமல் தடுக்கிறது.




அடுத்த குறி யார்? யாரெல்லாம் இவ்வாறு கொலை செய்ய வாய்ப்பிருக்கிறது? எதற்காக கொலை செய்யப்படுகிறார்கள்? ஹாரியின் கூட இருக்கும் பெண் அதிகாரி காத்தரீன் உண்மையிலேயே உதவத் தான் வந்திருக்கிறாரா? என்பதைப் பல சுவாரசியமான பல திருப்பங்களுக்கு பின் முடிவுக்கு கொண்டு வந்திருக்கிறார் யூ நெஸ்போ.

கதாபாத்திரங்களும், அவற்றை அவர் படிப்படியாக கட்டமைப்பதும் மிகவும் சுவாரசியமாக இருக்கிறது. திருப்பம் என்றால் திருப்பம், பக்கங்களைத் திருப்பிக் கொண்டே இருக்க வேண்டியதாக இருக்கிறது. ஒரு இடத்திலும் அலுக்காத ஒரு நடை. இவராக இருக்குமோ என நினைக்கும் நேரத்தில் அவர் இல்லை என்று ஆதாரங்கள் வருவது ஹாரிக்கு எரிச்சலாக இருக்குமோ இல்லையோ நமக்கு மிகவும் கொடுமையாக இருக்கிறது.

கடைசி பகுதி போலீஸ் பார்வையிலிருந்து சடாரென கொலைகாரன் பார்வைக்கு செல்வது மிகவும் புதியது இல்லை என்றாலும் அவன் தரப்பு விளக்கம் நாவலுக்கு மிகவும் தேவையாகவும் அதே நேரம் விறுவிறுப்பாகவும் இருக்கிறது. மெல்லிய நகைச்சுவை, அபார வேகம் வெறுப்புடன் ரசிக்க வைக்கும் ஒரு கதாநாயகன். ஒரு சிறந்த குற்றப் புனைவுக்கு வேறு என்ன வேண்டும்?

முதல் இரண்டு ஹாரி ஹோலே நாவல்கள் இன்னும் ஆங்கிலத்தில் வெளிவரவில்லை. மூன்றாவது நாவலில் ரெட் பிரஸ்ட் கதையிலிருந்து துவங்கும் ஹாரி ஹோலேவின் சாகசங்கள் எந்த அமெரிக்க ஹீரோவின் சாகசத்துக்கும் குறைவில்லை. இரண்டு வாரங்களில் மூன்று ஹாரி ஹோலே புத்தகங்களை முடித்த திருப்தியில் சொல்கிறேன். நம்பி வாங்கி வாசிக்கலாம்.

பிரகதீஷ் பிரசன்னா

## ஆசிரியர் குழு





பானு கோம்ஸ், ஆசிரியர்    ஜி. பிரதீப்    இளங்கோ

## ஆசிரியர் குழு – வழிகாட்டுபவர்கள் (Editorial Mentors)






பிரைம் பாயிண்ட் சீனிவாசன், தலைமை ஆசிரியர்    வி. பொன்ராஜ், Dr. அப்துல் கலாமின் ஆலோசகர்    ஓம் முருகன்    ஜே. பிரபாகர்


**Published by**

**Prime Point Foundation, Chennai**

**Please send your feedback to**

**newgenthamizhan@gmail.com**

**Please also read our English Ezine at**

**www.corpezine.com**



Disclaimer: The views and opinions expressed in this ezine are those of the authors / contributors and do not necessarily reflect the views and opinions of the Publishers and Editorial Team members.